## ஆகஸ்ட் - 2

**"நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்." - சங் 95 : 6**

எந்த ஒரு கிறிஸ்தவனும் தன்னுடைய ஜீவியத்தில் ஒரு சரியான ஸ்திரமான நடத்தையைப் பரிபாலிக்கவும், அப்போஸ்தனால் வர்ணிக்கப்பட்டிருக்கிற "தங்கம், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்" இவைகளால் கட்டப்பட்டது போன்ற குணமும் விசுவாசமும் கொண்ட அமைப்பை ஜெபமில்லாமல் கட்டுவிக்கவும் கூடாது என்பது எங்களுடைய கருத்தாயிருக்கிறது. இதற்கு மேலாக, ஜெபத்தில் ஒழுங்கில்லாமலிருந்தால், ஜெபத்தில் முழங்காற்படியிடாமல் சொல்ல அநேகமாக விருப்பமுள்ளவர்களாகி விடுவோம். எல்லா சமயத்திலும் வாழ்ந்த மிகவும் உண்மையுள்ள மிகவும் சிறந்த கர்த்தருடைய ஜனங்களின் அனுபவங்களும் காட்சிகளும் இதை வலியுறுத்தும். **- Z ’99, 184(R 2501)**

தேவனுடைய சிருஷ்டிகளாக அவருடைய தாராளத்தின் பேரில் அவ்வளவு சார்ந்திருக்கிற அவருடைய நன்மையினால் அவ்வளவு ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிற நமக்கு இருக்க வேண்டிய ஒரே மனப்பாங்கு, தேவனைத் தொழுது கொள்ளுதல். தொழுதுகொள்ளுதல் என்பது வாழ்த்துதல், புகழ்தல், நன்றி தெரிவித்தல், பாவ அறிக்கை, வேண்டுகோள், ஐக்கியம் உறுதி இவைகளைக் கொண்ட ஜெபத்தை மாத்திரமில்லாமல், தனக்கும் உலகத்துக்கும் முழுமனதுடன் செத்து, தேவனுக்கென்று ஜீவித்திருப்பதையும் குறிக்கிறது. நம்மை முழுவதும் பிரதிஷ்டை செய்து, அந்த நிலையைக் காத்துக்கொள்ளுவதே தொழுதுகொள்ளுதலின் மையமாகும். நாம் இந்த முழுபக்தியையும், நன்றியுள்ள உயர்வாக மெச்சக்கூடிய விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும், கீழ்ப்படிதலிலும் நம்முடைய நியாயமான பலியின் ஊழியமாக செலுத்த வேண்டும். நம்மோடு சேர்ந்து இப்படிச் செய்ய, ஒருவரை ஒருவர் அழைக்கவும் வேண்டும். **- P ’34, 109, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாத் 20:3; 34:8; சங் 22:22; 26:6-8; 29:2; 66:4,13,14; 100; 116:12-14,17; 119:108; ஏசா 38:20; 56:6,7; எரே 31:12; மத் 4:10; யோவா 4:23,24; பிலி 3:3; எபி 12:28; வெளி 14:7.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 154 (R 5692).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் தேவனுக்கு ஊழியம் செய்தேனா? எப்படி? பலன்கள் எவை?**